[27th December 1956

Issue of printed receipts by village officers

* 437 Q.—SRI V. BALAKRISHNAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state with reference to the answer given to question No. 3221 on 2nd March 1956 when the system of issuing printed receipts with counterfoils to the public for payments made to village maniyams will be introduced?

THE HON. SRI M. A. MANICKAVELU : Orders have already been issued in G.O. No. 2784, Revenue, dated 13th July 1956, prescribing the form of receipt and also directing that the receipts should be in a book form, that they should be written in triplicate, one original and two carbon copies and that double-sided carbon papers should be used for taking the copies. The Board is taking action to print and supply the necessary forms to the village headmen in the districts. This new system will begin in the districts shortly.

SRI M. KALYANASUNDARAM : கிராம மணியக்காரர்களால் வசூலிக்கப்படும் நில வரி உட்பட சகல தொகைக்கும் அச்சடிக்கப்பட்ட ரசீதுகள் கொடுக்கப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கிஸ்து செலுத்துவதற்கும் இம்மாதிரி ரசீது உண்டு. மற்ற இனங்களுக்கும் இதே ரசீது தான். ஆரம்பத்திலே கிஸ்து செலுத்துவதற்கு ரசீது கொடுப்பதை ஆரம்பிக்கிறோம். மற்ற இனத்திற்கும் இதே முறைதான் வரும்என்று நினைக்கிறேன்.

SRI S RAMALINGAM : ரசீது புத்தகங்களெல்லாம் எந்த அச்சகத்திலே அச்சடிக்க சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறார்கள் ? என் இப்படிக் கேட்கிறேன் என்றால், பல ஸ்தாபனங்களுக்குத் தேவையான "பாரங்கள்" வெகு நாட்களாகக் கிடைப்பதில்லை என்ற புகார் சொல்லப்படுகிறது. ஹோ அண்டு கம்பெனிக்கு உத்தரவிட்டிருந்தால் ரசீது புத்தகங்கள் வந்து சேருவதற்கு இன்னும் ஒரு வருஷத்திற்குமேல் ஆனாலும் ஆகலாம். அடுத்த வருஷ கிஸ்தி வசூல் காலத்திலேயே அச்சடித்த ரசீது கொடுக்கக் கூடிய முறையிலேயே பல அச்சகங்களிலே இந்த ரசீது புத்தகங்களை அச்சடிக்க "ஆர்டர்" கொடுத்து, எல்லா கிராமாதிகாரிகளுக்கும் விநியோகிக்க சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : உடனடியாக அமுலுக்குக் கொண்டுவருவதற்காக என்னென்ன பிரயத்தனங்கள் எடுத்துக்கொள்ள முடியுமோ அந்த பிரயத்தனங்கள் எல்லாம் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன.

SRI K. ARANGANATHAN : நமது அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது, "உடனடியாக" என்று குறிப்பிட்டது திட்டமாக இல்லாததால், வரப்போகிற ஜனவரி மாத வரி வசூலின்போதே இப்படிப்பட்ட அச்சடிக்கப்பட்ட ரசீதுகள் கொடுப்பதற்கு தகுந்த ஏற்பாடுகளை அரசாங்கம் செய்யுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : உடனடியாக வரலா என்றுதான் நானும் நம்புகிறேன்.

Shifting of the Legislative Assembly to Fort St. George

* 438 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state with reference to the answer given to question No. 3422 (starred) on 15th March 1956,

27th December 1956]

whether the Government have taken any decision in regard to the shifting of the Legislative Assembly to Fort St. George and if so, what it is?

THE HON. SRI C. SUBRAMANIAM : No Sir. No final decision has been taken yet.

SRI M. KALYANASUNDARAM : இந்த இடத்திலேயே சட்ட சபையை தொடர்ந்து நடத்துவதில் என்ன கஷ்டம் இருக்கிறது ? எதற்காக இடத்தை மாற்றவேண்டுமென்ற விஷயம் ஆலோசனையில் இருந்து வருகிறது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : முதலாவதாக இந்த இடம் சபையின் அங்கத்தினர்களின் எண்ணிக்கைக்கு பெரிதாக இருக்கிறது. மற்றொரு விஷயம் மந்திரிகளுக்கும், இலாகாவில் இருப்பவர்களுக்கும் வேலை செய்வதற்கு இங்கும் அங்குமாக போகவேண்டியிருந்தால் பல இடைஞ்சல்கள் ஏற்படுகின்றன. இதையும் மற்ற விஷயங்களையும் ஆலோசனை செய்து சீர்தூக்கிப் பார்த்து எது சரி என்று முடிவு செய்யவேண்டும். இது யோசனை செய்து முடிவு செய்யவேண்டிய விஷயமாக இருப்பதால், இன்னும் அரசாங்கத்தின் ஆலோசனையில் இது இருப்பதாக நான் சொன்னேன்.

SRI V. R. NAGARAJAN : இதுவே என்னுடைய கடைசி கேள்வியாகும். (சிரிப்பு.) அசெம்பளியின் கட்டிடத்தை எந்தக் காரணத்தை முன்னிட்டும் இந்த இடத்தைவிட்டு கவுன்சில் இருக்கும் இடத்துக்கோ அல்லது கோட்டைக்கோ மாற்றவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த இடம் பொது ஜனங்களுக்கும், அசெம்பளி அங்கத்தினர்களுக்கும் மிகவும் உரித்தாக இருக்கின்றது. வேண்டுமானால் கவுன்சிலை இங்கே வைத்துக்கொள்ளலாம். நடுவில் ஒரு screen proof partition போட்டுவிட்டு ஒரு பக்கம் அசெம்பளியும், மறு பக்கம் கவுன்சிலையும் நடத்தலாம். கடைசியாக நான் கேட்கும் இந்தக் கோரிக்கையை அரசாங்கம் கவனித்து ஆவன செய்யுமென்று நினைக்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இது அங்கத்தினரின் யோசனையே தவிர கேள்வி அல்ல.

SRI S. JAYARAMA REDDIAR : இந்த சட்ட சபையை இங்கே இருந்து அங்கே மாற்றுவது என்ற விஷயம் கவனத்திற்கு வந்து முடிவு செய்யும் முன்பு ஒரு விஷயத்தை சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

DEPUTY SPEAKER : **This is question hour.**

SRI S. JAYARAMA REDDIAR : எற்கனவே கோட்டைக்கு முன்பாக ஹார்பரை விஸ்தரிப்பதற்கு இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக நம் சர்க்காருக்கு 30 லட்சம் ரூபாய் compensation கொடுக்கப்பட்டிருப்பதாகவும் கேள்விப்படுகிறேன். ஹார்பர் அந்த இடத்தில் விஸ்தரிக்கப்பட்டுவிட்டால் இதைவிட அது அவ்வளவு சௌகர்யமான இடமாக இருக்காது. அந்த 30 லட்சம் ரூபாயை வைத்துக்கொண்டு இங்கே ஒரு women hostel கட்டப்போவதாகவும் சொல்லப்படுகிறது. அப்படியிருந்தால் அது ஒரு அசம்பாவிதமான காரியமாக இருக்கும். நம்முடைய சபையை இங்கேயே வைத்துவிட்டு women hostel-ஐயும் வேறு இடத்தில் கட்டும்படியான ஏற்பாடுகளை செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : **This is not a question. It is only an opinion.**

[27th December 1956

SRI M. KALYANASUNDARAM: On a point of information Sir, இந்தப் பிரச்னை மிக முக்கியமானதாக இருப்பதினாலே, இதுபற்றி முடிவு எடுப்பதற்கு முன்பாக அடுத்த சட்ட சபை முன்பு இந்தப் பிரச்னையை கொண்டுவந்து சட்ட சபையின் அபிப்பிராயத்தையும் அறிந்து கொண்டு பிறகு சர்க்கார் அதுபற்றி ஒரு முடிவு எடுப்பார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: சர்க்கார் சொன்ன ஆலோசனையும் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

Additional sales-tax on sugar

* 439 *Q*.—SRI V. BALAKRISHNAN: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the amount of revenue realized by the imposition of additional sales-tax on sugar at one anna per rupee at the first point of sale from the date of levy to the end of October 1956; and

(*b*) the amount of revenue realized by the levy of General Sales Tax on sugar at three pies per rupee for the period from May to the end of October 1956?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) Rs. 22,34,018 approximately.

(*b*) Rs. 6,31,107 approximately.

SRI V. BALAKRISHNAN: நமக்கு இந்தத் திட்டத்தின்கீழ் பூராவாக வரவேண்டிய தொகை வரவில்லை என்பது மந்திரி அவர்களுக்கு தெரியவருமா ? அது விஷயமாக சென்னை வியாபாரிகள் புகார் செய்திருக்கிறார்கள். அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது ?

THE HON. SRI M. A. MANICKAVELU: பூராவாக வரவேண்டிய தொகை எவ்வளவு என்பது எனக்குத் தெரியாது. அதனாலே அதிலிருந்து கழித்து நான் சொல்வதற்கில்லை. ஏதோ இந்த அகதிகள் சலுகையை நல்ல வகையிலே உபயோகப்படுத்தாமல் அதில் தில்லுமல்லுகள் செய்கிறார்கள் என்ற விஷயம் மாத்திரம் எனக்குத் தெரியவந்திருக்கிறது. இந்த விஷயங்களெல்லாம் ஆராச்சியில் இருக்கின்றன.

SRI N. K. PALANISAMY: வெளி மாகாணங்களிலிருந்து திருட்டுத்தனமாக லாரிகளில் ஏராளமான சர்க்கரை கொண்டு வருகிறார்கள். சர்க்கார் அதன்மீது சரிவர வரியை வசூல் செய்ய முடியவில்லை. ஆகவே இம்மாதிரி திருட்டுத்தனமாக ஆங்காங்கு சவுக்கிகளை வைத்து தடை செய்வதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுத்திருக்கிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: இம்மாதிரி திருட்டுத்தனமாக கொண்டுவரப்படும் சர்க்கரையை தடை செய்வதற்காக சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

SRI V. BALAKRISHNAN: சர்க்கரை விற்கும் இடங்கள் சர்க்காரிடம் பதிவு செய்யப்பட்டிருக்கிறதா ? அந்த இடங்களில் தினந்தோறும், வாரம்தோறும், மாதம்தோறும் எவ்வளவு மூட்டைகள் கொண்டு வந்து குவிக்கப்படுகின்றன என்பதை கணக்கெடுப்பதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: வாலாயமாக வியாபாரம் செய்கின்ற வர்த்தகர்கள்தான் பதிவு செய்துகொண்டிருக்கிறார்கள். புதிதாக அங்கேயிருந்து ஓடிவந்த அகதிகளுக்கு ஸ்திரமான ஒரு இடமில்லை என்று எனக்குத் தெரியவருகிறது. இந்த விஷயத்தையும் இன்னும்